# மெய்யியலில் கெடுதி பற்றிய பிரச்சினை –ஓர் ஆய்வு

பேராசிரியர் நா.ஞானகுமாரன்

## ஆய்வுச் சுருக்கம்

*கெடுதியானது குறிப்பாக மெய்யியலில் இடர்ப்பாட்டினை அளிக்கின்ற எண்ணக் கருத்தாக இருந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். கடவுள் இருப்பிற்கும் கெடுதியின் இருப்பிற்குமிடையில் எழும் முரண்பாடானது மெய்யியலில் பிரச்சினைக்குரியதாக அமைவதனால் அப் பிரச்சினையினை இனங்காட்டுவதுடன் அது தொர்டபான முக்கிய அம்சங்களை இக் கட்டுரை ஆராய முற்படுகின்றது.*

கெடுதி பற்றிய பிரச்சினையானது மெய்யியலில் குறிப்பாகச் சமய மெய்யியலில், ஒழுக்க மெய்யியலில் குறிப்பிடத்தக்கதொன்றாக விளங்குகின்றது. இந்திய மெய்யியலிலும் கெடுதி பற்றிய கருத்தானது முதன்மைக் குரியதொன்றாக விளக்கப்பட்டிருத்தல் காணலாம். ஒரு செயலின் விழுமியம் பற்றியதாகக் கெடுதி என்பது எடுத்தாளப்படலாம். இதனை வரைவிலக் கணப்படுத்த முற்படுகையில் சில இடர்ப்பாடு எழுவது நோக்குதற்குரியதாகும். பொதுவில் நன்மை, கெடுதி பற்றிய வரைவிலக்கணமானது அறிஞர்களிடையே பெரிதும் விரிவுபட்ட விளக்கத்தினை அளிப்பதாக அமைந்துள்ளது. உதாரணமாக நல்ல பையன், நல்ல மாடு, நல்ல கத்தி, நல்ல வீடு, நல்ல உணவு, நல்ல வீரன், நல்ல எண்ணம் எனும் போது ஒவ்வொன்றிலும் "நல்ல" எனும் பதம் வெவ்வேறுபட்ட பொருளைச் சுட்டுவதாகவுள்ளது. நாம் தீர்மானிக்கும் தன்மையில் அதன் பெறுமதி அமைவதாகின்றது. பரந்த அளவான வரைவிலக்கணமானது இதன் வேறுபாடுகளை இணைத்து விளங்கிக் கொள்ள வழிவகுக்கும். அவ்விதமான ஒரு வரைவிலக்கணம் நவல்லி (Naville) என்பவரால் எடுத்தாளப்பட்டது. நன்மை என்பதெனில் என்ன கட்டாயம் இருக்கப்படவேண்டியது என்பதாகும் எனவும் கெடுதி என்பதெனில் என்ன கட்டாயம் இருக்கப்படக் கூடாதது என்பதாகும் எனவும் விளக்கினார்.[1] இந்த வரைவிலக்கணத்திற்கும் இருவித எதிர்ப்புக்கள் எழலாம். ஒன்று கட்டாயமாக என்பது ஒழுக்கப் பார்வைக்குப் புறம்பாகச் சிந்திக்க முடியாத வகையில் வலிதான அமைப்பில்லை. மேலும் மொழியின் இறுக்க நிலையில் ஒரு பேனா போன்ற கருவி ஒரு வகைக் குணமுடையதாகக் கட்டாயம் இருக்கப்பட வேண்டியது என எண்ணுவது அபத்தமானது. இரண்டாவதாக கட்டாயமாக இருக்க வேண்டுமென்பது எது சரியானது என்பதனை விபரிக்கும் சொல் போல இருக்கின்றது. சரியும் (right) நல்லதும் (good) இங்கு பெரிதும் ஒத்த சொல் போல விளங்கினும் அதன் உள்ளடக்கமானது வேறுபாடானதாகும்.[2] சரி என்பது விதிகளுக்கு அமைவது. நல்லது என்பது ஏதோ ஒரு குறிக்கோளுக்கு ஏற்ப பெறுமதியானதாகும். எனவே அது விரும்பத்தக்கதாகும் எனலாம்.

ஒரு செயலை நல்ல செயல், நன்மை தரும் செயல் என ஏற்று அதை அடைவதற்கு எடுக்கும் முயற்சிகள் எப்போதும் ஒரேவகையி னதாக அமைவதில்லை. ஒரு செயலை நல்ல செயல், நன்மை தரும் செயல் என ஏற்றுக் கொள்வதிலும் தனியாளிடையே வேறுபாடெழு

வது சாத்தியமாகும். இவ் வேறுபாடு கொண்ட கருத்தமைவுகளில் எது பயன்தரவல்லது, எது சரியான முறைமைக் குரியது, எது பொது நிலையில் ஏற்புடையது எனும் வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் ஒழுக்கவியல் சிந்தனையாளர்கள் பலர் ஆராய்ந்துள்ளனர். இவ்வாறாக எழுந்த கோட்பாடுகளில் குறிப்பிடத்தக்கனவாகப் பயன் பாட்டுவதாக் கோட்பாடு (Utilitarianism), இயற்கைவாதக் கோட்பாடு (Naturalism), இன்பவாதக் கோட்பாடு (Hedonism), நோக்கமிலாக் கொள்கை (Dentological Theory), உள்ளுணர்வு வாதக் கோட்பாடு (Intuitionism), கட்டுறுதி வாதக்கோட்பாடு (Prescriptivism), விவரணவாதக் கோட்பாடு (Descriptivism), நோக்கு நிலைக்கோட்பாடு (Purposivism), உணர்ச்சிவாதக் கோட்பாடு (Emotivism) எனப் பல அமைந்தன[3] இக் கோட்பாடுகள் நுட்பமான கருத்தாக்கங்களினால் ஒரு செயலின் தராதர நிலையினை எடுத்தாளுவதாக அமைந்தன வெனலாம்.

பொதுவில் நன்மை என்பது ஓர் எல்லை வரை பொருமதியானது. அதனால் அது விரும்பத்தக்கது. அந்த எண்ணத்தின் ஆற்றலினை விபரிக்கிறது. நன்மையானது கவரத்தக்க சக்தியை வற்புறுத்துகின்றது. இந்த வகையில் சொல்லப்போனால் நன்மையானது விரும்பத்தக்கது எனவும் கெடுதியானது விரும்பத்தக்கதன்று எனவும் சிட்ஜ்விக் கொள்வது காணலாம்.[4] எனினும் இந்த வகையில் கூறும்போதும் இன்பவாதிகளின் கருத்தோட்ட நிலையில் செல்லவில்லை என்பது கவனத்திற்குரியது. விரும்பத்தக்கது இன்பம் மட்டுமே எனும் கருத்தினைக் கொள்வதுதான் பிழையான அல்லது தவறான உள்வியலாகும். நன்மை விரும்பத்தக்கது கெடுதி விரும்பத்தகாதது என்பது பொதுவுகள நோக்கில் வரைவிலக்கண ரீதியாக ஏற்கத்தக்கதாகும்.

கெடுதியை இருவகையில் பிரித்து நோக்கலாம். ஒன்று மனிதர்களுக்கு வந்தமைவது அதாவது துன்பம், இடர், வேதனையை அளிப்பது. மறுபுறம் மனிதர்கள் ஆற்றும் கெடுதியாகும். இந்த இரு வகையும் பல வகையில் உளரீதியான தொடர்புடையது. இருந்தபோதிலும் இதுவொரு போதுமான வேறுபாடாகும். இவற்றிற்கெனத் தனித்தனிப் பெயரளிப்பது இலகுவானதன்று. எனினும் பெய பெயரின் (Fairbairn) இதனைப் பௌதிகக் கெடுதி (Physical evil), ஒழுக்கக் கெடுதி ஒழுக்கக்கெடுதி (Moral evil) எனச் சுட்டிகிறார்.[5] றிக் றொட் (Rick Rood) கெடுதியை ஒழுக்கக்கெடுதி (Moral evil), இயற்கைக் கெடுதி (Natural evil) எனப் பகுப்பது காணலாம்.[6] பௌதீகம் என்பதன் வழி எது ஒன்று வழமையாகவுள்ளது அல்லது இயற்கையாக உள்ளது எனக் கொள்ளலாம். பௌதிகக் கெடுதி எனும் வேளை வழமைக்கு மாறாக எல்லா வேதனைகளையும் எதிர் கொள்ளல் எனும் வகையில் பொருள்படும். இயற்கையின் அழிப்புச் சக்திகள், நோய்கள், புயற்காற்று, பூமி அதிர்ச்சி, மண்சரிவு போன்றன இந்நிலைக்குரியன. ஒழுக்கக் கெடுதியானது மனித செயற்பாட்டிற்கு உரியதாகின்றது. இது வேறுபட்ட காலங்களில் வேறுபட்ட கருத்துக்கள் வழி அமைவுற்றமை காணலாம். எது நன்மை? எது கெடுதி? என்பது பற்றிப் பிரபஞ்ச ரீதியாக மக்களிடையே பொதுமையான கருத்து ஏற்பட்டதில்லை. இதுவே பல்வேறுபட்ட கருத்துக்கள் வேறுபட்ட முறைகளில் வழங்கப்பட்டமைக்குக் காரணமாயிற்று. இங்கு ஒழுக்கச் சிந்தனைகளை ஆராய்வதன் வழியே எச் செயல் நன்மையானது, கெடுதியானது என எண்ண முயற்சிக்கலாம் எனலாம்.

எல்லாச் சமயங்களும் உலகிலுள்ள மெய்யியல் சிந்தனையாளர்களும் நன்மை,

கெடுதி பற்றிய பிரச்சினைகளுக்கு தகுந்த விடைதேடும் பணியில் முயன்றனர். துன்பங்கள், வேதனைகள், குற்றங்கள், போன்ற இன்னோரன்ன கெடுதிகள் இருப்பதற்கான காரணத்தையும் அதனை விலக்குவதற்கான வழிமுறைகளையும் தேடமுனைந்தனர். இவ்வாறான முயற்சிகளும் விளக்கங்களும் மூன்று வகைகளில் எடுத்தாளப்படலாம். முதலாவதாக எல்லாம் நன்மைக்கே எனும் போக்குடைய நம்பிக்கையாளர் (Opimistic thinkers), இரண்டாவதாக கெடுதியே நடக்குமென எதிர்பார்க்கும் நம்பிக்கையீனர் (Pessimistic thinkers) மூன்றாவதாக ஒன்றே என்ற கொள்கையுடைய ஒருமையாளர் (Monistic thinkers) எனலாம்[7]. பழங்கால நம்பிக்கையாளர் வரிசையில் ஆதிகால பார்சிய, ஈரானிய மூலநூல்களில் அதாவது சென்டாவஸ்த (Zendavesta) வில் இருமைசார்ந்த நன்மை, கெடுதியினை இயற்கையில் உள்ள முரண்பட்ட இரண்டு பொருட்களாக விளக்கப்பட்டது. பழைய சீரோஸ்ட்ரிகன் (பார்சியமதம்) மதத்தில் பெரிதும் நாடகப் பாங்கான உதாரண முகத்தால் விளக்கிய வகையில் இவ் இருமைவாதம் காணப்படு கின்றது. இப்பிரபஞ்சத்தில் எல்லா நன்மைக் குரிய படைப்பாளராக, நற்தெய்வமாக அஹுறா மஹ்டா (AhurnMazda)[8] எடுத்தாளப்படுகிறார். இப்பிரபஞ்சத்தில் எல்லா கெடுதிக்குரிய படைப்பாளராக, கெட்ட தெய்வமாக அகிறிமன் (Ahriman) சுட்டப்படுகின்றார்[9] இவர்களுக் கிடையிலான போராட்டம் தொடர்கதையாக அமைந்தது. பார்சியர்களின் நன்மை, தீமையை உருவாக்குவர்களாக இரு படைப்பாளர் பற்றிய கருத்தானது யூதர்களின் முன்னோராலும் ஏற்கப்பட்டது. பார்சியரால் குறிப்பிடப்பட்ட அர்யனா வாயோ பழைய ஏற்பாட்டில் ஏடன் தோட்டமாக மாறிற்று. சாத்தான் (Satan) அகிறிமனின் கெடுதியான குணநிலைக்குரிய வனாக ஏற்கப்பட்டான். இவ்வாறான கருத்தேற் பானது கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், யூதர்கள் ஆகியோரிடம் அமைந்தமை காணலாம். நல்லவரான கடவுளால் ஏன் கெடுதியை அழிக்கமுடியவில்லை என்பதற்கு திருப்தியான பதிலைக் கொடுக்க முடியவில்லை. கியூறு தீர்க்கதரிசிகள் சிலர் கடவுள் நன்மையின் படைப்பாளர் போல கெடுதியின் படைப்பாளரா கவும் விளங்குவதாக நம்பினர். 'நான் ஒளியையும் இருளையும் உருவாக்கினேன் என்றும் நான் அமைதியும் கெடுதியையும் படைத்தேன்' எனச் சுட்டும் வாக்குகளை உதாரணமாகக் காணலாம்[10]. 'இக் கருத்தானது 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த கல்வினிஸ்டாலும் (Calvinists) ஏற்கப்பட்டமை குறிப்பிடத்தக்க தாகும். மனித துன்பங்களின் காரணமாக இறைவன் நீதியற்ற, இரக்கமற்றவரோ என்ற முனைப்பானது நம்பிக்கையீனக் கருத்தாளர் களிடம் எழுந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மத்தியகாலத்தில் வாழ்ந்த ஜினேஸ்டிக் (Gnostics) உலகானது நல்ல கடவுளாலன்றி பிசாசினால் படைக்கப்பட்டது எனக் கருதினர். எனினும் இரக்கக் கடவுளால் படிப்படியாக இந் நிலை மாற்றமடைந்ததெனக் கொள்ளப்பட்டது. இக்கருத்துக்களும் கெடுதி பற்றிய பிரச் சினைக்கு விடையளித்ததாகக் கொள்ள முடியாது. சில நம்பிக்கையாளர் கெடுதியின் இருப்பினை நிராகரிப்பதோடு எல்லாமே நன்மையானதே தவிர கெடுதியில்லை எனக் கருதுவர். மேலும் நன்மையென்பது சாத்தி யமான உண்மையென்றும் கெடுதி என்பது நன்மையின் மறுப்பு மாத்திரமே என்பர். இது ஒரு தீவிர நிலைக்குரியதெனலாம். நம்பிக்கையீனர் இதற்கு மாறான பிறிதொரு தீவிரப் போக்கினை எடுத்தாள்வர். அவர்கள் கெடுதியானது சாத்தியமான உண்மையென்றும் நன்மை என்பது கெடுதியின் மறுப்பு மாத்திரமே என்பர். எனினும் இரண்டு விளக்கங்களும் திருப்தியளிப் பதாயில்லை.

அளவையியலையும் தர்க்க முறைகளை யும் இணைத்து கெடுதி பற்றி பிற்காலத்தில் சிந்திக்கத் தலைப்பட்டனர். விஞ்ஞான ஆராய்ச்சிகளும் ஆய்வுகளும் இயற்கையின் ஒன்றாம் தன்மையை புலப்படுத்த முனைந்தன. இந்தியாவில் இயற்கையின் ஒற்றுமைத் தன்மை ஒருமையாளர்களால், குறிப்பாக வேதாந்தி களால், பெரிதும் விளங்கப்படுத்தப்பட்டன. குறிப்பிட்ட ஒருவரால் அல்லது குறிப்பிட்ட நேரத்தில் இவ்வுலகு உருவாக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டனர். , அவர்கள் உலகுக்கு 'தோன்றுகிறது' எனும் பதத்தையே பயன் படுத்தினர். ஒருமை வாதத்தைப் போதிக்கும் வேதாந்தத்தின்படி தோற்றப்பாடானது உலகம். அதனுடைய கெடுதிகள் அனைத்தும் மாயை அல்லது பொய்த்தோற்றம் எனவாகின்றது. இந்தக் கொள்கையின் ஒரு வகைச் சாயலை சமகாலத்து மேலைத்தேய கிறிஸ்தவ விஞ்ஞா னத்திலும் நிழலாடக் காண்கிறோம். இது கெடுதி இருப்பதாகவும் ஆனால் ஒரு பொய்த்தோற்றம் எனவும் அது உண்மையான அடிப்படையினைக் கொண்டிருக்கவில்லை எனவும் நிறுவுகிறது. கெடுதி ஒரு பொய்யான நம்பிக்கை என்று மேரி பேக்கர்எடி சுட்டுதல் காணலாம்[11]. வேதாந்த மெய்யியலாளர்களைப் பொறுத்தவரை நன்மை, கெடுதி என்பன ஒரு சார்புப் பதங்களேயாகும். ஒன்றின்றி மற்றது இருக்கமாட்டாது. நன்மையானது கெடுதியின் இருப்பில் தங்கியுள்ளது எனவும் கெடுதியானது நன்மையின் இருப்பில் தங்கியுள்ளது எனவும் விளக்கினர். ஒன்றில் ஒன்று தங்கியுள்ள வகையில் அவை பிரிக்கப்படமுடியாதவை என்பர். அன்றிப் பிரிக்க முனைவது அவற்றிடையேயுள்ள சார்பு, ஒன்றிலொன்று தங்கியுள்ள இயல்பை அழிப்பது மாத்திரமன்றி அப் பதங்களையே அழிப்பதாகிவிடும் வாய்ப்புள்ளது என்பர்[12]. வேதாந்த மெய்யி யலாளர்கள் நன்மை, கெடுதிக்கு இடையிலான வேறுபாடானது ஒரளவிலேயே, அதாவது ஒளிக்கும் இருளுக்கும் இடையிலான வேறுபாடு போலவே தங்கியுள்ளது என்பர். மேலும் ஒரேவிடயம் ஒரு சந்தர்ப்பத்தில் நன்மையாகவும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் கெடுதியாகவும் அமையவல்லது. தீ ஆனது வாழ்க்கைக்கு நன்மையானதாகவும் அதே வேளை பிறிதொரு சந்தர்ப்பத்தில் கெடுதியானதாகவும் அமையவல்லது. எனவே செயலின் விளைவைக் கொண்டே நன்மை, கெடுதி என்பது அழைக்கப்படலாம். மறுவார்த்தையில் கூறின் நன்மை, கெடுதி என்பன எமது மனதிலேயே தங்கியுள்ளதெனக் கூறலாம். இந்த உலகத்தின் இருமைத்தன்மையான நன்மையும் கெடுதியும் உண்மையானவையல்ல என்றும் இவை சொற்களில் பேசப்படுபவை எனவும் அவை மனதில் மாத்திரம் இருப்பவை எனவும் பாகவதம் சுட்டுவது இங்கு காணலாம்[13] எமது விருப்பை நிறைவேற்றும் வேளை நன்மையானதாகவும் துன்பம், வேதனையை அளிக்கும் போது கெடுதியாகவும் அழைக்கப்படலாம். ஒரே செயல் வேறுபட்ட நிலைகளில் நன்மையாகவும் கெடுதியாகவும் அமையலாம் என்பதனை ஆழ்ந்து நோக்கின் புலப்படவல்லதாகும். நிலையான சக்தியை அல்லது தெய்வீக வாழ்வை உணர்ந்தால் நன்மை, கெடுதி என்பன எமது மனதை, வாழ்வைச் சார்ந்தனவே என்பதனை அறியலாம். இந்திய ஞானி களின்படி கடவுள் நன்மை, கெடுதியை உருவாக் கவோ அல்லது ஒருவரிடமிருந்து பாவத்தையோ, நல்லொழுக்கத்தையோ எடுப்பதில்லை. அவர் குற்றவாளிகளைத் தண்டிப்பதோ அல்லது நல்லவர்களுக்கு வெகுமதியோ அளிப்பதில்லை. அறியாமையின் காரணமாகவும் தெளிவற்ற புரிந்துணர் வினாலும் தான் கடவுள் நன்மை, கெடுதியைப் படைப்பதாகக் கற்பனை செய்து விடுவதாகக் கருதுகிறோம் என்பர்.

கெடுதி பற்றிய பிரச்சனையைப் பேசுவது சகஜமானது என்பதுடன் அப்பெயரின் கீழ் வெவ்வேறாகக் கூடிய பல பிரச்சினைகளின் கூட்டமொன்று தொகுக்கப்பட்டுள்ளதென்பதை அறிந்திருப்பின் அப்படிப்.பேசுவதில் தவறொன்றுமில்லை. ஏனெனில் கெடுதி பல தரப்பட்டவை என்பதுடன் பல விதமான வினாக்களையும் எழுப்புகின்றன. கெடுதி பற்றிய பிரச்சினையானது கெடுதி பற்றிய உண்மைத்துவம் ஒரு புறமாகவும் கடவுளின் சக்தி அல்லது அவரின் நன்மையின் பேறுள்ள இறையியல் நம்பிக்கைகள் அல்லது முடிநிலை மறுபுறமாகவும் அவற்றிற்கிடையிலான முரண்பாடுகள் அல்லது பிரத்தியட்சமான முரண்பாடுகள் பற்றி அக்கறையுடையதாகவும் உள்ளது. இறையியல் கருத்துக் கொண்டிருப்போருக்கே கெடுதி எனும் பிரச்சினை மிகுந்த கூர்மையானதாகவும் கடின மானதாகவும் இருக்கின்றதென்பது குறிப்பிடத் தக்கது. கிறிஸ்தவம், யூதம், இந்துமதம், இஸ்லாம் போன்றன கடவுள் பற்றிய கொள்கையில் ஒருமைவாத இறையியலைக் கொண்டுள்ளது. கடவுள் எல்லாம் வல்லவர். எல்லாம் அறிந்தவர், எங்கும் அன்புமயமானவர். முழுமையும் ஆற்றலும் பிரபஞ்ச உற்பத்தியாளனாகவும் விளங்குகிறார். இக்கருத்துக்களின் அடிப்படையில் கெடுதி பற்றிய கருத்தானது இந்நம்பிக்கைகள் ஒரு வகையில் இருதலைக் கோளாக நிறுவப்படலாம். கடவுளானவர் எல்லா ஆற்றலுமுடையவராக இருக்க வேண்டும். அவர் எல்லாம் நல்லவராயின் அவர் கெடுதியினைத் தடுக்க வேண்டும். ஆனால் கெடுதியானது நிலைத்து இருக்கின்றது. எனவே கடவுள் ஆற்றல் நிறைந்தவர் அல்லாது இருக்க வேண்டும் அல்லது மிகவும் நல்லவராக அல்லாது இருக்க வேண்டும் எனக் கொள்ளப்பட வேண்டியதாகும் எனும் நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

கெடுதியானது நன்மைக்கு முழுமையான எதிரானதாகும். கடவுளும் நல்லவராவார். அவரே தலைமையானதும் நன்மைக்குத் தூய மூலமுமாவார். அதேவேளை கெடுதியின் ஆக்கியவராகவோ அல்லது அதிகாரியாகவோ அவர் இருப்பது சாத்தியமல்ல அவர்மேல் கெடுதியின் நிழல்கூட வராது ஆனால் இந்தவிடத்து கடவுளுக்கும் கடவுட் தன்மைக்கும் எதிராக எவ்வாறு மற்றவை நிகழும் எனும் வினா எழுகின்றது. நன்மையானது நன்மையின் ஆற்றலுக்குக் கீழ்ப்பட்டது. அவ்விதம் அல்லாது போனால் அது முழுமையான நன்மையுமாகாது. எனவே கடவுள் தான் முழுமையான நன்மையான வராவார். அவரது கடவுட் தன்மையானது முழுமையான ஆற்றல் வாய்ந்ததாயின் அவர் சர்வ வல்லமையுள்ள நன்மையானவர் ஆவர். மறு புறத்தில் கடவுள் உண்மையான கடவுளாயின் கெடுதியின் உண்மைத்துவமானது கடவுளுடன் காரணமாகாது. கெடுதிக்கு எது ஆதாரமாக இருக்கின்றதோ அதற்கு அவர் ஆதாரமாக இருக்க வேண்டும். கடவுளின் கருத்தில் கெடுதி கெடுதியானது. ஆனால் கெடுதியின் கருத்தில் கடவுள் எவ்விதம் கடவுளாவார் என்பது எழுப்பப்படுகின்றது கடவுள் பற்றிய நியாயப்படுத்தலானது கெடுதி பற்றிய கேள்வியினை உண்மையில் தொடுவதாகவுமில்லை எனலாம்.

தீமைக்கோட்பாடானது உண்மைத்துவத்துக்கு உள்ள எல்லாக் கருத்துக்களையும் மறுக்குமுகமாக தீங்கினையும் (Badness) மறைத்துள்ளது. ஆனால் அது மூடத்தனமும் பொருளற்றதுமானால் அது கேள்விக்குரியது மன்று. உலகானது குருட்டுச் சுபாவவிருப்பின் விளைவாகும் எனத் தீர்மானித்த சோப்பன்ஹர் (Schopenhauer) தீமைக் கோட்பாட்டினை பிரதிநிதிப்படுத்தியவர்களில் முக்கியமான

வராவர். பகுத்தறிவுக் கோட்பாடு (Rationalism) அனைத்துமிகுறையெனும் வாதம் ஆகியன பிரபஞ்ச நன்மையில் நம்பிக்கையுள்ள வகையில் இந்தப் பிரச்சினைத் தீர்வு காண்கின்றன. உதாரணத்திற்கு ஸ்பினோசா (Spinoza) எல்லா எல்லையுள்ள பொருட்களும் ஓர் உயர்வான பொருளின் தர்க்க ரீதியான இன்றியமையாத மாறுதல்கள் எனும் போது எதுவும் கெட்டதில்லை என இனங்கண்டார். ஸ்பினோசாவின் கருத்துக்கு சக்தி வாய்ந்த விளக்கத்தினைக் ஹெகல்(Hegal) அளித்தார்.

கடவுளின் சிறப்பு நிலையும் அதே விகிதாசாரத்தில் கெடுதியின் நிலைபேறும் மேலும் மேலும் கிரகிக்க முடியாத நிலையுடையதாகிறது. கடவுளென்று ஒன்று இருந்தால் மட்டும் அத்துடன் கடவுள் ஓர் அர்த்தத்தில் பிரபஞ்சத்துக்கு வெளியேயும் அதைவிட உயர்வாகவும் அதற்குப் பொறுப்பாகவும் இருந்தால் மட்டும் அதற்கு எதிரான முறைப்பாடேதும் ஏற்றுக்கொள்ளப் படலாம். நாங்கள் காண்பதான விடயப் பொருட்களின் முறைக்கு எதிராக அதற்குப் பொறுப்பான அதை மறுப்படிக்கு இருக்க வேண்டியவாறல்லது ஆக்கியவராக அல்லது ஆக்கியிருக்க வேண்டியவராக நாங்கள் சரியாகவோ அல்லது பிழையாகவோ கருதுகின்ற ஆளொருவரும் இல்லாதவிடத்து இழிந்து விமர்சிப்பது கருத்தற்றதாகும் எனக் கருதினர். இதில் எவருக்குக் கெடுதி பற்றிய பிரச்சினை தெளிவாக இருக்கின்றதோ அவருக்குத் துல்லியமான உய்த்துணர்வுண்டு. அந்தோ அவரை எங்கு காணலாம் எனது முயற்சியை அவர் முன் வைப்பேன். அத்துடன் அவர் எனக்குத்தரும் மறுமொழியை அறிவேன். அத்துடன் அவர் எனக்குச் சொல்பவற்றை நன்கு விளங்கிக்கொள்வேன். இந்த வகையில் கெடுதி பற்றிய எல்லாப் பிரச்சினைகளும் ஒன்றாகச் சேர்கின்றதெனலாம். தியோடிசி கொள்கைக்கு இணங்க எல்லா ஆற்றல் நிறைந்த கடவுளின் மட்டற்ற நன்மைத் தன்மையை கெடுதியின் உண்மைத்துவத்துடன் இணைக்க முயற்சி அமைந்தது. தியோடிசி (கடவுள் நீதி) இலக்கியத்தில் கெடுதியின் வகைகள் பின்வருமாறு வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.

1. மனித உயிரிகளால் தீங்கானது தோற்றுவிக் கப்பட்டது. அது ஒழுக்கத் தீங்கு அல்லது பாவமாகும்.
2. வருத்தம் பற்றிய உடலியல் உணர்வும் துன்பத்தின் மனவேதனையும் பாவத்தின் காரணமாக அமையலாம்.
3. இயற்கைத்தீங்கு நோய்கள் புயற்காற்று பூமி அதிர்ச்சி, நிலச்சரிவு அது போன்றன.
4. தற்செயலாக ஏற்படும் சம்பவங்கள் மேலும் உருவாக்கப்பட்ட பொருட்களின் பூரணத்து வமின்மை இவற்றிற் சில பௌதிக அதீத கெடுதி என அழைக்கப்படுகின்றது.

எல்லையற்றதான ஆற்றலுள்ளதும் நல்ல கடவுளும் தனது பிரபஞ்சத்தில் ஏன் ஒழுக்கக் கெடுதிகளை அனுமதிக்கின்றார்? எல்லை யற்றதான ஆற்றல் உள்ளதும் நல்ல கடவுளும் தனது பிரபஞ்சத்தில் ஏன் நோ, வேதனை ஆகியவற்றினை அனுமதிக்கின்றார் என்ற கேள்விகள் முதலிரு வகையில் அமையும் கெடுதி பற்றி ஆய்வுக்கு அமையும் தூண்டுதலாக எடுத்தாளலாம்.

கெடுதி பற்றிய பிரச்சினையானது ஒகஸ்டினது வாழ்க்கை முழுவதுமே முயன்ற ஒன்றாகும். அவரால் நிறுவப்பட்ட முக்கியமான கருத்தானது பின் பெரும்பாலான கிறிஸ்தவ சிந்தனையாளர்களால் தொடரப்பட்டது. கிறிஸ் தவத்திற்கு மாற்றமடைவதற்காக ஒகஸ்டீன் மக்னிசிசும்ஆல் கவரப்பட்டிருந்தார். சமகால நிறுவனங்களில் ஓர் ஆற்றல் வாய்ந்ததும்

கீழைத்தேயத்தும் அடிநிலையையும் இது கொண்டிருந்தது. இது முடிவான நன்மை கெடுதி எனும் இருமைவாதத்தினை ஒளி அல்லது ஆன்மா இருள்நிலை எனும் வடிவத்தில் ஏற்று ஒப்புக்கொண்டது. இந்தக் கொள்கையினின்றும் கிறிஸ்தவத்தினை நோக்குகையில் ஒகஸ்டீன் ஒரு நல்ல கடவுளே முழு இறுதியான உண்மைப் பொருள் எனும் நம்பிக்கைக்குச் சாதகமான இறுதியான இருமை வாதத்தினை நிராகரித்தார். மேலும் சடஉலகு படைப்பாளனின் நன்மைத்து வத்தினைப் பிரதிபலிக்கின்றதெனும் வகையில் சடஉலக ஏற்புக்குச் சாதகமாக மக்னீசிசத்தின் சடத்தினை இழிவாகப் பேசுவதனை நிராகரித்தார் ஆனால் முழுதான முடிவான ஆற்றலானது சந்தேகத்திற்கு இடமின்றி நல்லதெனின் கெடுதி என்றால் என்ன? மேலும் அது எங்கிருந்து வருகின்றது? இந்த வினாவிற்கு விடை அளிக்கையில் ஒகஸ்டைன் ஒன்றை ஒன்று தழுவிநிற்கும் ஒரு வகையினதான கருத்துக்களை முன்னேற்றி கெடுதி பற்றிய தனிப்பட்டதும் அழகியற் கருத்துக்களினை முன்வைத்தார்.

கெடுதியானது துன்பம் வேதனை வறுமை என்பனவாகும். கெடுதியானது ஒகஸ்ரின் கருத்தில் சுதந்திரமாகத் தனித்து நிற்பதில்லை. அது எப்போதும் நன்மையிலேயே ஒட்டி நிற்கின்றது. ஆனால் உண்மையாக நிலைத்து நிற்பதில் கெடுதியான தன்மையாக இருக்கும். இவ்வாறு கடவுள் தோற்றுவித்த எல்லாம் நன்மையானது. கேடின் தோற்றப்பாடு உள்ளார்ந்த நன்மையான உயிரி ஊழலானதும் கெட்டதுமாக வரும்போதே கெடுதி ஏற்படுகிறது. ஒகஸ்ரின் உயிரியை அவர் நன்மையுடன் சமாதானப்படுத்தி நோக்குகையில் அதே சிந்தனையை வெளிப்படுகிறார். கடவுள் உள்ளார்ந்த சிறந்த நன்றான உண்மையான உயிரியாகும். ஆகவே அதி உயர் நன்மையாகும். அதாவது அவர் கொண்டு வந்திருக்கிறார் எனும் காரணத்தினால் அவர் கெடுதி எனக் கூறும் தன்மையானது முழுமையாக இருத்தல் முடியாது ஆகும். ஏனெனில் இயற்கையிலேயே ஒரு பொருள் இவ்வாறு கெடுதியுறும் எனில் அது ஒழிந்து போகிறது. அதில் ஒட்டுண்ணியான கெடுதியுறும். அத்துடன் இல்லாது ஒழிதல் வேண்டும். ஆகவே முழுமையான கேட்டினைக் கொண்ட உயிரி இருக்க முடியாது எனவாகிறது.

கெடுதியானது பாவம், பாவத்தின் தண்டனை என இரு வகையினதாகக் கூறலாம். மேலும் இதனை நாம் செய்யும் கெடுதி எம்மைப் பிணிக்கும் நோ, வருத்தம் எனவும் இரண்டாகக் கணிக்கலாம். ஒகஸ்ரீனின் அழகியற் கருத்துக்கள் பிளோரினஸ் என்பார் கருத்தினின்று செயற்பட்டன எனலாம். இந்த கருத்துக்கு இணங்க கெடுதியாக தோன்றுவது எல்லாம் நல்லது எனப்பட்டது. கடவுள் என்ற கருத்திலிருந்து பார்க்கும் போது பிரபஞ்சமானது நல்லதாகும். எல்லாப்படைப்பிலும் கூட கெடுதி என அங்கொன்றில்லை எனக் கொண்டார். பழைய அழகியற் கருத்தினின்றும் (அது நிறைவுக் கொள்கை என அழைக்கப்பட்டது) பெறப்பட்டது. ஒகஸ்ரின் சிலவேளைகளில் கெடுதி பற்றிய எண்ணத்தினை நன்மையை அதிகம் பிரகாசிக்கும் எனும் வகையில் உபயோகிக்கின்றார்.

அன்சலம்(Ansalam) பாவமானது தண்டனையால் சமப்படுத்தப்படுகையில் ஒழுக்க ஒழுங்குக்குக் கெடுதியில்லை எனக் கருதுகின்றார். பாவம் செய்யாதவர்கள் மகிழ்ச்சியுடையவர்களாயின் பிரபஞ்சமானது பூரணத்துவமானது. ஆன்மா எதனைத் தேர்ந்தெடுத்தாலும் பிரபஞ்சம் அழகானதும் ஒழுங்கானதும் ஆகும். அதனை உருவாக்கி

யதும் ஆள்பவரும் கடவுள் ஆவார். 13ம் நூற்றாண்டில் தோமஸ் அக்குவானஸ் (Thomas Aquinas) ஆல் ஒகஸ்ரின் உடைய பிரதான கருத்துக்களானது மீண்டும் தோற்றுவிக்கப் படுதல் காணலாம். 16ம் நூற்றாண்டில் லூதர் (Luther) கல்வின் (Calvin) ஆகிய சீர்திருத்த வாதிகள் பொதுவாக கடவுள் நீதிக் கொள் கையினை வளர்த்திச் செல்ல விரும்பாவிடினும் ஒகஸ்ரின் எல்லாக் கெடுதியும் மனிதனின் குற்றத்தினால் அமைவதென்பதனைப் பின்பற்றினார். லைபினிட்ஸ் (Leibnize - 1710) தனது தியோடிசியில் (Theodices) இந்த உலகே சாத்தியமான எல்லா உலகிலும் பார்க்கச் சிறந்தது என்றும் உண்மையில் இந்த உலகு சிறந்தது என்பது இதில் கெடுதியில்லை என்பதற்காக அல்ல. வேறு சாத்தியமான பிரபஞ்சத்தில் அதிகமான கெடுதி இருக்கும் என்பதனாலேயே என்றார்.

ஒழுக்கக் கெடுதியைப் பொறுத்தவரை ஒகஸ்ரின் கடவுள் மனிதனைப் பாவங்கள் இன்றி படைத்தார் என்றும் ஆனால் மனிதன் விருப்பத்துடன் கடவுளால் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தைத் தவறாகப் பாவித்துப் பாவத்தினுள் விழுந்தான் என்றும் குறிப்பிடுவர். இதில் சிலர் கடவுளின் கருணையால் மீட்கப்பெறுவதாகவும் சிலர் நிலையான தண்டனையைப் பெறுவார்கள் எனவும் சுட்டப்பெறுகின்றது. இந்த மரபு வழியான தியோடிசியானது பலரின் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டது. ஒழுக்கக் கெடுதியின் மூலத்தில் மனிதர்கள் தூயவர்கள் என்றும் விருப்பத்துடன் அவர்கள் பாவத்தில் விழுந்தார்கள் என்பது சுயமுரண்பாடு என்றும் புத்திசாலித்தனமற்றதெனவும் (Friedrich Schleiermacher) பிரட்றிக் செயமக்கர் போன்றோர் குறிப்பிடுவர். மரபுவழியாக தியோடசியின் ஊடாக கடவுள் மனிதனை எப்போதும் ஒழுக்கங்களை தெரிய விட்டமை என்பது தர்க்க ரீதியாக சாத்தியமற்றதொன்றெனச் சமீபகால சுயாதீன மறுப்புக்கள் சுட்ட முயல்கின்றன. மேலும் கடவுள் தன்மையும் கெடுதியின் உண்மைத்துவமும் இருதலைக்கோளாக ஒன்றுக்கொன்று முரண்படுதலும் கவனத்திற் குரியதாகின்றமை என்றும் விமர்சனத்திற்குரிய விடயங்களாகின்றன.

கிரேக்க சிந்தனைகளும் குறிப்பாக பிளேட்டோனிக் சிந்தனைகளும் கெடுதி பற்றிய கருத்துப் பொருள் வளர்ச்சிக்குதவின. ஒரிஜன (Origen) ஒகஸ்டையின் (Ougustine) போன்றோர்களால் மேலும் முன்னேற்றப்பட்ட தெனலாம். பரந்துபட்டதான எந்த மதத்திலும் பாவம் பற்றிய பிரச்சினை கருத்து ஏற்கப்பட்டுள்ளமை காணலாம். எந்த மதமும் பாவம் (கெடுதி) பற்றிய பிரச்சினையை உதாசீனம் செய்யவில்லை. கெடுதியானது பாவம், வருத்தம் எனும் இருவித வடிவத்தில் தோன்றுகின்றது. எந்த ஒரு மதமும் கெடுதியை மறுத்தால் அல்லது அலட்சியம் செய்தால் அது மனிதனுக்கு விடுதலைக்குரிய வழியைக் காட்ட முடியாது போய்விடும். வாழ்க்கையில் பாவம் பற்றிய பிரச்சினையும் இதனின்று எவ்விதம் விடுபடுதல் என்பது அடிக்கடி எழுவதொன்றா கும். எவன் உயர்ந்த அறிவினை அர்ப்பணிப்பு டன் அடைகின்றானோ அவன் நன்மை, கெடுதி என்பவற்றிற்கு அப்பாற்பட்டவனாகின்றான் எனப் பகவத் கீதை சுட்டுதல் காணலாம்.[14] இந்தப் பிரச்சினையே தெளிவாகவும் திறமையாகவும் எது தீர்க்க முனைகின்றதோ அதுவே மனிதனது ஆதரவைப் பெறும் சமயமாகின்றது. இவ்வகையில் இந்திய சமயமானது குறிப்பாகக் கெடுதி பற்றிய பிரச்சினையுடன் தெளிவான கருத்தினைக் கொண்டு விளக்குகின்றது.

மனித இனத்தின் நடைமுறையில் அதன் ஆரம்பத்திலேயே பாவம் பற்றிய பிரச்

சினையானது காணப்படுகின்றது. இருந்த போதிலும் பாவம் என்பது வேறுபட்ட பொழுதுகளில் வேறுபட்ட பகுதிளில் உள்ள வேறுபட்ட மக்களால் வேறுபட்ட பொருள்களில் சுட்டப்பெற்றன. புராணக் கதைகள் சமயங்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்கின்றன. பௌத்தர்கள், இந்துக்கள் பாவமானது அறியாமையின் விளைவென நம்புகின்றனர். இஸ்லாமும் இருவகையில் அறிவினைப் பெறுதலே பாவத்தின் நீக்கத்திற்குரிய வழியெனக் கொள்ளுதல் காணலாம். சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளை விளக்கியமையுடன் பாசத்தின் கூறுகளான ஆணவம் இக் கெடுதிக்கு நிலைகளனாக அமைகின்றதென எடுத்துரைப்பது காணலாம். எனினும் தூய்மைக்குரிய ஆன்மா இயல்பில் தூயதாக இருப்பினும் கெடுதியினைத் தன்னியல்பில் கொண்டுள்ளதென எண்ணுவது தவறுக்குரிய தென்பதனை எடுத்தாளும்.[15] ஆனால் கிறிஸ்தவர்கள் மறுபுறத்தில் பாவத்தின் நீக்கத்தினை எந்த அளவு அறிவோ அல்லது மனித முயற்சியோ உருவாக்க முடியாதென நம்புகின்றனர். இது ஆழமானதொன்று என்றும் கடவுளின் கருணை ஊடாக மாத்திரம் மீட்சி அளிக்கவல்லதெனக் கருதுகின்றனர். மானிட வியலாளர்கள் எல்லா சமூகவிரோதச் செயல்கள் அனைத்தும் பாவம் எனக் கருதுவர்.

பௌத்த மதம் துக்கம், துன்பம், பிணி, பாவம், நோ, வருத்தம், கெடுதி போன்றவற்றினை விலக்குவதனையே அடிநிலையாகக் கொண்டு அமைந்துள்ளது. வாழ்வென்பதே கெடுதியாகப் புத்தருக்கு தென்பட்டது. துன்பத்திலிருந்து மீள்வது என்பது வாழ்விலிருந்து மீள்வதை யொக்கும். கடவுள் என்பது பௌத்தத்தில் இல்லையானாலும் கர்ம விதியே தீமைக்கும் தீமைச் செயலிழப்பிற்கும் காரணமாகின்றது.

பௌத்தம் துக்கம், துக்ககாரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் எனும் நான்கு மார்க்கங்களை தலையாய தன்மையாகக் கொண்டமைகின்றது. இந்தப் பாவ பந்தத்தினின்று விடுதலை அடைதலே வாழ்வின் நோக்காகவும் அதுவே நிர்வாண நிலையது எனவும் குறிப்பிடுகின்றது. பாவமானது நாம் ஆற்றுகின்றமைக்கேற்ப அதனை அனுபவிக்க வேண்டிய அத்தியாவசிய நிலையாகும் எனப் போதிக்கின்றது. இதன் வழி எம் கன்மங்கள் பாவச் சக்கரமாய் தொடர்ந்து பல பிறவிகளுக்கு வித்திடுகின்றதெனவும் பாவம் நீங்க பற்றறுக்க வேண்டியதும் பிறவி நீக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

"நல்லறம் செய்வோர் நல்லுலகனாவதும்
அல்லறம் செய்வோர் அருநரகடைதலும்"[16]

என செயலுக்கேற்ற பயனை தெளிவுறுத்து கின்றது. இந்த வகையில் பிறவி என்பதே துன்பமென்றும் அதனை நீக்கலே பாவ நீக்க வழி எனக் காட்டுகின்றது.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேரின்பம்"

என எடுத்துக் காட்டப்படுகின்றது.[17] பிறந்தவர்கள் தமது முன் வினைகளுக்கு அமைய பிறப்பார்கள் என்பது,

" தீப்பிறப்புழந்தோர் செய்வினைப் பயத்தான்
யாப்புடை நற்பிறப்பெய்தினர் போலப்.."
(20–3–4)

எனவரும் அடிகளூடாக அறியக்கிடக்கின்றது.

பௌத்தர்கள் கெடுதி என்பது பற்றிக் குறிப்பிடுகையில் மணிமேகலை ஆசிரியர்,

'தீவினை என்பது ....
கொலையே களவே காமத்தீ விழைவு
உலையே உடம்பில் தோன்றுவ மூன்றும்

பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்

**சொல்லெனச்** சொல்லில் தோன்றுவநான்கும்

**வெஃகல்** வெகுளல் பொல்லாக்காட்சி என்ற உள்ளந்த தன்னில் வருபன மூன்றும் எனப் பத்துவகையாய்.... எனப் பத்திறனையும் கெடுதியான செயல்கள் என்பதனுள் அடக்கி விடுகிறார். எல்லாப் பாவத்தினின்றும் விடுபடுதல், நன்மை செய்தல், இதயத்தைத் தூயதாக்கலே பௌத்தம் என தம்மபதம் குறிப்பிடுதலின்று பௌத்தத்தின் முதன்மை யான பிரச்சினை பாவம் பற்றிய பிரச்சினையே ஆகும் என்பது தெளிவு.[18] பாவம் பற்றிய கருத்தில் பௌத்தமானது செய்வினையானது செய்தவரை விட்டு அணுகாதென்பதனைக் கொள்கின்றமை,

**'அவ்வினை நின்னையும் அகலாது ஆங்குதலும் என்றிவை தெய்வம் கூறலும்'[19]**

என கூறுமுகத்தாலும் தெளிவாக்கலாம். அதேவேளை கிறிஸ்தவமானது செய்த பாவமானது கடவுட் கருணையினால் முற்றாகப் பாவ மன்னிப்புக்குரியதாக்கப்படலாம் எனவுரைப்பது இங்கு கவனிக்கத்தக்க தொன்றாகும்.

வேதப் பாடல்களில் பாவம் பற்றிய கருத்தமைப்பானது காணப்படுகின்றது. ரிக் வேதத்தில் அதிதி (aditi) வருணம் மற்றும் கடவுளருக்கு முறைப்பாடு கூறுவதாகவும் உள்ளது. ரிக் வேதத்தில் பாவம் பற்றிக் குறிப்பாக வசிஸ்த (Vasishtha) மண்டலம் 7ல் கூறப்படுதல் காணலாம். அக்கினி பாவத்தினை எரிப்பவர் எனச் சுட்டப் பெறுகின்றது. பாவம் பற்றிய விளக்கம் அதர்வ வேதப் பிரமாணங்களிலும் காணலாம்.[20] உபநிடதத்தில் பாவம் பற்றிய சொல்லானது அருமையாகப் பன்னிரு தடவைகள் காணப்படுகின்றன. சிலவேளை களில் கெடுதியோ அல்லது அதிஸ்டமின்மையோ குறிக்கவில்லை என ஐயுற வைக்கின்றது. ஆனால் சில வேளைகளில் பாவம் பற்றிய கருத்தானது ஐயத்திற்கிடமற்றது. இந்து தத்துவங்களில் மறுபிறப்புக் கொள்கையானது காணப்படுகின்றன. இது பாவ நிலையினைத் தெளிவாக விளக்கும் தாத்தநாகின்றது. மறுபிறப்புக் கருத்தானது பல்வேறுபட்ட வேளைகளில் பல்வேறுபட்டோரிடம் காணப் பட்டது. பௌத்தத்தில் உள்ள கதையில் மகனோடு பயணம் செய்ததாய் இறந்ததும் பெண் நரியான நிலையும் இதனையே உணர்த்துவதாக உள்ளது. ஆனால் கீழைத்தேயம் தான் இக் கருத்துக்கு மூலம் எனக் கூறமுடியாவிடினும் இது மற்றைய கருத்துக் களினின்று வேறுபட்டதாயும் வேறு விதமான தாயும் விளங்குதல் காணலாம். முற்கால பௌத்தத்தில் (1000 – 700 BC) இதன் மூலத் தைக் காணலாம். இந்துமதத்தில் கடோ உபநிடதத்திலும்[21] தெளிவாக இதன் சாயலைக் காணலாம் பிருகதாரணிய சாந்தோக்கிய உபநிடதங்களிலும் காணலாம்.

ஆன்மாக்கள் அறியாமையினால் வினை களினை ஆற்றி அதன்வழி பல்பிறப்புக்களை அடைந்து உழலுகின்றனர். இறைவனது அருளினால் உண்மையை உணர்ந்து அறியாமை நீங்கியவிடத்து பாவம் அவித்தை, அறியாமை யானது விலகுகின்றது. அவ்வேளை ஆன்மாக் கள் இறைவனுடன் இரண்டறக் கலக்கின்றன. அதுவே விடுதலை எனக் குறிப்பிடுவர்.

'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'

எனும் நிலையில் ஆன்மாக்கள் அறியாமை மயமாய் நிற்கின்றது. அந்நிலையில் அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவினைப் பெற்றால் அவர்கள் பிறந்த பிறப்புக்கும் எங்கள் பெருமானினைக் கண்டு விடும் நிலையினை அடைவார்கள். இதனையே

'தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே [22] என மணிவாசகர் சுட்டி நிற்பது நோக்கலாம். இறைவன் மக்களின் இடரான கெடுதி களைந்து உயர்வடையச் செய்வதனை அருளாளர்களின் அனுபவங்களின் வாயிலாகக் காணலாம்.

"போற்றிப் புகழ்திருந்து பொய்கெட்டு மெய்யானார்.
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே"
எனவும்
"அல்லற் பிறவி அறுப்பானே" எனவும் சுட்டும் நிலை தெளிவிற்குரியதாகும்.[23]

சாங்கிய மதத்தினை நோக்கின் ஒழுக்கக் கெடுதியானது ரஜஸ் தமஸ் எனும் குணங்களினின்று எழுவதாக அமைகின்றது. இதனை பிற்பட்ட உபநிடதங்களிலும் காணலாம். பிரகிருதியானது மூன்று குணத்தினை உடையது. இவற்றின் கலப்பு வேறுபாட்டால் அவற்றின் நன்மை கெடுதி ஆகியன தீர்க்கப்படுகின்றன. சாங்கிய தத்துவச் சார்புடைய மகாபாரதம் பகவத்கீதையிலும் கெடுதி பற்றிய கருத்தானது காணப்படுகின்றது பகவத் கீதையில் ஏன் மனிதன் தன் விருப்பின்றியே பாவம் செய்யத் தூண்டப்படு கின்றான்? என எழும் வினாவுக்கு கண்ணன் விருப்பு கோபம் எனும் வடிவில் தாங்க முடியாவலுவில் கெடுதியானது மனிதனை ஆளுகின்றதெனப் பதிலிறுக்கின்றார். மேலும் இது ஞானம் அறிவினை அழிக்கின்றது. மற்றும் பொருள் பண்ட ஆசையும் அதன் விளைவினால் நல்லொழுக்க அழிவு அமைகிறது. கெடுதியின் வழி திறப்படுகிறது. ஒழுக்க ஊழலாகிறது. ஆனால் மகாபாரதத்தில் பாவத்தின் முழுப் பொறுப்பும் மனிதனிடமிருந்து கடவுளுக்கே அளிக்கப்படுகின்றது.

வேதாந்தத்தில் நோக்கின் படைப்பாளனே பௌதிகக் கெடுதி, ஒழுக்கக்கெடுதி காரணனாவானா? என்பது போன்ற வினாக் களுக்குரிய விடை ஆராய்விற்குரியதாகின்றது. இறைவனே இறுதிக் காரணன் ஆவான். உலகிற்கு முதற்காரணன் இறைவனே. ஆரம்பகாலத்து இந்தியக் கருத்துக்களில் பாவம், குற்றம் பற்றித் தெளிவான வரைவிலக்கண விளக்கம் இருக்கவில்லை. ஆனால் வேதாந்தத்தில் தெளிவும் வரைவும் சிறப்பாக இருக்கிறது. வேதாந்தத்தில் உலக அறியாமையின் விளைவு பொய்த் தோற்றம் எனவும் விளக்குவர். கெடுதியானது அறியாமையின் விளைவாகும். அறியாமை யானது உண்மை எனவோ அல்லது உண்மை இருப்புடையனவுமல்ல. அதன் இருப்பானது அவித்தைக் காரணமாகும். பௌதிக ஒழுக்கக் கெடுதிகளானது அறியாமையின் பொய்த்தோற்ற விளைவாகும்.

எல்லாத் துன்பம் கெடுதிகளைக் குறிக்கும். இந்துமத மறுபிறப்பானது பாவம் பற்றிய உள்ளுணர்வினை அளிக்கின்றது. மேலும் பாவ எண்ணங்களைத் தோற்றப்பாடான கெடுதி துன்பங்களாக மாற்றுகிறது. கிறிஸ்தவத்தில் இக்கொள்கை முற்றிலும் வேறுபட்டது. கிறிஸ்தவ நம்பிக்கையானது கெடுதி பற்றிய கருத்திலும் பார்க்க பாவம் பற்றிய கருத்துக் களுக்கு முக்கியத்துவம் கொடுக் கின்றது. அதாவது கிறிஸ்தவத்தில் ஒரு மனிதனானவன் உண்மைக் கிறிஸ்தவனாவான் எப்போதெனில் அவன் பாவம் பற்றிய கருத்து உதயமாகின்ற போதிலேயாகும். பாவம் காரணமானதாகவும் கெடுதி விளைவாகவும் பாவம் முதலாவது இடமாகவும் இரண்டாவது இடமாக கெடுதியும் விளங்குகின்றது. பாவமானதும் கெடுதியானதும் இலகுவான வடிவில் கிறிஸ்தவத்தில் பைபிளில் காணப்படுகின்றன. பாவமானது பொதுவில்

கடவுளின் விருப்பிற்கு பணிவின்மை என அமையும். கடவுளின் விருப்பிற்குரிய சரியான பாதையினின்று வேறுபடுதலே பாவம் என்பதற்குரிய அடிப்படைக் கருத்தாகும்.

பாவத்தின் விளைவாகவே தண்டனையாக கெடுதி அமைகின்றதெனும் நம்பிக்கை கிறிஸ்தவத்தில் அமைந்துள்ளது பாவம் எப்படி வந்ததெனில் அது கடவுளது படைப்பில் இருக்கவில்லை என்றும் ஆனால் மனிதனது செயலினால் தான் ஏற்பட்டதெனும் நிலை சுட்டப்படுகின்றது. ஆதாம் ஏவாள் கதை மூலம் இறைவன் முதல் உயிரிகளைப் படைத்தா ரென்றும் அவர்களுக்குச் சுதந்திரமளிக்கப் பட்டது என்றும் ஏடன் தோட்டத்தில் விலக்கப்பட்ட கனியை வேண்டி உண்டு பாவத்தின் மூலமாகினார்கள் என அறியக் கிடக்கின்றது. இதன் தொடர்ச்சியே பாவத்தின் தொடர்ச்சியாயிற்றென்பர். சாத்தான் கூட கடவுளின் படைப்பே, ஆனால் அவர்களும் சுதந்திரத் தெரிவுரிமையினால் கடவுளுக்கு தெரியாது அவர்கள் பிற்பட அமைந்தனரென விளக்கப்படுகின்றது. இறைமகன் யேசு கிறிஸ்து மக்களின் பாவம் கருதி பாவத்தினை மன்னித்தார் எனவும் விளக்கப்படுகின்றது பாவத்தின் தண்டனையும் விளைவுமே கெடுதி எனும் கிறிஸ்தவ நம்பிக்கையானது மனித நியாயத்தின் முன் விமர்சிக்கப்படுகின்றன. அது நீதியில்லை. ஒழுங்கற்றதெனக் குறிப்பிடப் படுகின்றது. கடவுள் புனிதமானது சரியானது உலகை ஆளுகின்றது எனக் கொண்டு பாவம் சுயநலமானது அவரது விருப்புக்கெதிரானது. புனித நிலைக்கு எதிரானது எனில் புனிதம் பாவத்திற்கு எதிராக சக்திமிக்கதாக எதிர்த்து நீதியை நிலைநாட்டுவது வேண்டியதாகின்றது. இவ்விதமல்ல எனின் அவர் தம்முடன் ஒழுங்கற்றவராவார்.

இஸ்லாமிய மதக் கருத்துப்படி பாவ பந்தத்தினின்று விடுதலை பெறுதற்கு தூய கடவுள் பற்றிய அறிவே வழியாகும். கடவுள் பற்றிய நம்பிக்கைக்கும் கடவுள் பற்றிய அறிவுக்கும் இடையில் ஒரு பெரும் வேறுபாடுள்ளது. சாதாரணமாக கடவுளில் நம்பிக்கையுள்ள ஒருவர் பாவத்தினின்று மீள்வதற்குரிய சக்தியுடையவரென்பதல்ல. கடவுளை நம்புகின்றவர் இறை இருப்பினை ஏற்கின்றார். ஆனால் கடவுள் பற்றிய அறிவுடையவர் உண்மையாகக் காண்கின்றார். உண்மையில் தூய அறிவு அல்லது தூய கடவுட் காதல் மாத்திரமே மனிதனைப் பாவ பந்தத்தினின்று விடுவிக்கும் என நம்புகின்றனர். இதுவே பொதுவில் ஆன்மாக்களின் தூய்மையின்மை யினை நீக்குகின்றது. அதுவே கெடுதியின் நீக்கத்திற்கும் வழியாகின்றது.

## அடிக்குறிப்புக்கள்


1. Niven, W.D; Good and evil, Encylopedia of Religion and Ethics, Ed. James Hastings, Edinburgh T & T. Clark, New York, p. 318
2. Loc. cit.
3. Hancock, R.N; (1974) Twentieth Century Ethics, Colimbia, University Press, U.S.A., pp. 11 - 13
4. Sidgwick; (1901) Methods of Ethics, London, p.110

5. Niven, W.D; Good and evil, Encylopedia of Relogion and Ethics, Ed. James, Hastings, Edinburgh T & T. Clark, New York, p.318
6. Rick Rood, Problems of Evil, Probe ministries - Problems of Evil on Internet p. 1
7. Abhedananda; (1951) Philospy and Religion, Ramakrishna Vedanta math, . calcutta. p.100
8. Ibid, p. 101
9. Good and evil deities are Ahura Mazdah and Angra Mainyu According to The problem of Evil, (1972) Ed. Paul Edwards, Encylopedia of philosphy, Macmillan Publishing Co. New York, Vol - 3 - 4, p. 136
10. Abhedananda; p. 104
11. The problem of Evil; (1972) Ed. Paul Edwards, Encylopedia of Philosophy, Mac millan Publishing Co New York, Vol 3 - 4, p. 136
12. Abhedananda; pp. 108 - 109
13. Ibid, p. 99
14. பகவத்கீதை, அத். II. v. 50
15. Sabarathna muthaliyar; 1988, Essentials of Hinduism, Dept. of Hindu Religions & Cultural Afairs, Srilanka, p. 80
16. மணிமேகலை 16 – 86 – 89
17. மணிமேகலை, 1 – 64 – 69
18. தம்மபதம் 188
19. மணிமேகலை, 20 – 125 – 127
20. 24ம் தைத்திரிய பிராமணம்
21. கடோ உபநிடதம், (1, 2, 5, 6, 11, 4, 10)
22. மணிவாசகர் திருவாசகம்.
23. மணிவாசகர் திருவாசகம், சிவபுராணம்.